திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, ஓசூரில் கட்டுவதாக இருந்த ஓட்டலை அங்கே கட்டுவதைவிட, பெங்களூருக்குச் செல்கின்ற பெருவழிச் சாலை சந்திக்கும் இடமாகவும்' சேலம் செல்பவர்கள் போகின்ற பெருவழிச் சாலை சந்திக்கும் இடமாகவும் கிருஷ்ணகிரி இருக்கிற காரணத்தால் அதை ஓசூரில் கட்டுவதைவிட கிருஷ்ண கிரியில் கட்டுவது நல்லது என்று முடிவெடுக்கப்பட்டு அங்கே கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

தொலைக்காட்சியில் திரைப்படப் பிரிவு வெளியீடுகள்

*வினா எண். 65 திரு யா. சை. மு. யூசப்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையிலிருந்து ஒளிபரப்பும் தொலைக்கண் காட்சியில் மத்திய அரசின் தகவல் துறையின் செய்தி திரைப் படம் வெளியிடுவது போல, மாநில அரசின் செய்தி மக்கள் நலத்துறை மூலம் வெளியிடப்படும் திரைப்படங்களும் வெளியிடக் கோரி மாநில அரசு, மத்திய அரசுக்குக் கோரிக்கை விட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிலை என்ன?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு திரைப்படப் பிரிவால் தயாரிக்கப்பட்ட சில படங்கள் தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்படுகின்றன.

(முற்பகல் 9.10)

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலிருந்து தயாரிக்கப்படும் செய்திப் படங்கள், தமிழக அரசால் ஒளிபரப்பப்படுகின்றனவா? வாரத்தில் எத்தனைமுறை ஒளிபரப்பப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன் : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு நிர்வாகத்திற்கு உட் பட்ட தொலைக்காட்சி நிறுவனத்தாரிடம் 21-2-79 அன்று கடிதம் மூலம், தமிழக அரசு தயாரிக்கின்ற செய்திப் படங்களையும், அதோடு, விவசாய வளர்ச்சிக்கான, ஏனைய இலாக்காக்களி னுடைய செயல் திட்டங்களை விளக்குவதற்காகத் தயாரிக்கப் பட்ட திரைப்படங்களையும் வெளியிட வேண்டுமென்று, ஒளி பரப்ப வேண்டுமென்ற வேண்டுகோள் விடப்பட்டு, அந்த வேண்டு கோள் தொலைக்காட்சி நிறுவனத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செய்தி மலர் 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 206 ஆகிய செய்திப்படங்கள் தொலைக்காட்சி நிலையத்திற்கு

[1980 பிப்ரவரி 6]

அனுப்பப்பட்டிருக்கின்றன. அதோடு, விளக்கப்படங்களான நிலக் கடலை பற்றியதும், விவசாயத் துறை சம்பந்தப்பட்டதுமான ''பூச்சி தர்பார்'' என்ற திரைப்படமும், ''மண்ணைப் பொன் னாக்குவோம்'' என்ற திரைப்படமும் தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, சமீப கால மாக மத்திய அரசு, மாநில அரசுகள் தயாரிக்கும் செய்திப் படங்கள் சினிமாக் கொட்டகைகளிலே வெளியிடப் படுவதில்லை என்று அறிகிறேன். எப்பொழுதிலிருந்து வெளியிடப்படுவதில்லை, என் வெளியிடப்படுவதில்லை? எப்பொழுது அதை வெளியிட இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, தமிழக அரசு வெளியிட்டுள்ள ''பூச்சி தர்பார்'' என்ற திரைப்படத்தையும், ''மண்ணைப் பொன்னாக்குவோம்'' என்ற திரைப்படத்தையும் தமிழகத் திலிருக்கின்ற எல்லாத் திரையரங்குகளிலும் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. பல திரையரங்குகளிலே திரையிடப் பட்டும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதை இன்னும் பார்க்கவில்லை என்று கருதுகிறேன்.

திரு. ஆர். மணிமாறன்:— பேரவைத் தலைவரவர்களே, குறிப்பாக தமிழக அரசைப் பற்றிய படங்களானாலும், தமிழக அரசைப் பற்றிய சாதனைகள், செய்திகளாக இருந்தாலும் அதைக் குறைந்த மதிப்பீட்டிலே எடுத்துக்கொண்டு, அதை ஒளி பரப்புவதில் பாரபட்சம் காட்டுவதாக தொலைக்காட்சி நடந்து கொண்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைக் கவனத்திலே எடுத்துக் கொண்டு, இதுமாதிரியான தவறுகள் நடைபெறாமல் இருக்க அரசு ஏதாவது விசேஷ கவனம் செலுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, இதுவரையில் செய்தி மலர்கள் 197, 21-2-79 லும், 199, 11-4-79 லும், 201, 18-4-79 லும் 202, 23-5-79 லும் 204, 4-7-79 லும், 205, 1-8-1979 லும் தொலைக்காட்சியிலே திரையிடப்பட்டிருக்கின்றன. மேலும், நாம் தயாரிக்கின்ற எல்லாத் திரைப்படங்களையும் தொலைக் காட்சி நிறுவனத்தாருக்கு அனுப்பி வைக்கிறோம். அவர்கள் ஏற்கனவே மத்திய அரசின் நிர்வாகத்திற்குள்ளே இருக்கின்ற தொலைக்காட்சி நிறுவனம் தயாரிக்கின்ற திரைப்படங் களோடு நாம் தயாரிக்கின்ற திரைப்படங்கள் ஓரளவிற்குக் காட்சி அமைப்பிலே ஒற்றுமை இருப்பதாலே அந்தக் காட்சிகளை மட்டும் நீக்கிவிட, அதை எடிட் செய்ய அவர்கள்

நம்மிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தத் தொலைக்காட்சியிலே நமது திரைப்படங்களை வெளியிடுகின்ற நேரத்தில் அதிலே பாரபட்சம் காட்டுவதாகச் சொல்லப் படுகிறது. அதைப் போலவே, நமது மாநில அரசு செய்தித் துறை தயாரிக்கின்ற திரைப்படங்களிலே கூட மாற்றுக் கட்சியினருக்கு உரிய இடம் தரப்படுவதில்லை என்றும் கூறப்படுகின்ற காரணத்தால் அதனைப் போக்கி அனைத்துக் கட்சியினருக்கும் சம வாய்ப்பு அளித்திட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கேள்வியிலே எந்த அளவிற்கு உண்மை இருக்கிறது என்பதை இந்த அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள வாசகசாலைகள்

*வினா எண் 66—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டிலுள்ள வாசக சாலைகளில் எல்லா அரசியல் கருத்துப் பத்திரிகைகளைப் போட அரசின் குறிப்பு உள்ளதா?

(ஆ) எப்போதிருந்து? விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) மாவட்ட நூலக ஆணைக் குழுவின் கீழ் இயங்கும் நூலகங்களில் அரசியல் கருத்துப் பத்திரிகைகள் போடவோ அல்லது போடக் கூடாது எனவோ அரசு ஆணை ஏதும் வழங்கவில்லை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்கள் நான் கேள்வி கேட்க எழுந்தபோது 'உனக்கோ வயதாகிவிட்டது, நீ ஏன் திரைப்படங்களில் வர வேண்டும் என்று ஆசைப்படுகிறாய்' என்று என்னிடத்திலே கேட்கிறார்கள். யாருக்கு வயதாகிவிட்டது என்று விளக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வயதைப்பற்றி அல்ல எனக்குள்ள அக்கறை. இந்த $2\frac{1}{2}$ ஆண்டுகாலமாக யார் பேசினாலும் உட்கார்ந்துகொண்டே பேசுகிற பழக்கம் திரு. ஆறுமுகம் அவர்களை விட்டுப் போகாது. அது எப்போதும் அவருடன் இருக்கும்.